# கோவிட்-19 வதந்திகளுக்கான பதில்கள்

**Use this as:**

- A presentation slide deck
- Download / share on social media
- Use as script for 1-2-1 discussions

BRITISH ISLAMIC MEDICAL ASSOCIATION

**Last updated 13th February 2021**

# **வதந்தி:** சலிக் காய்ச்சலை விட கோவிட் தொற்று ஆபத்தானதல்ல



**உண்மை:** சலிக் காய்ச்சலை விட கோவிட் 10 மடங்கு அதிகமாக மரணத்தை ஏற்படுத்தும்.

ஜோன் ஹொப்கின்ஸ் பல்கலைக்கழக ஆராய்ச்சிகளின்படி, கோவிட் மிகவும் ஆபத்தானது, அதிக மக்களைப் பாதிக்கிறது. மற்றும் சலிக் காய்ச்சலை விட வேகமாகப் பரவுகிறது.

இதனை சுலபமாகக் கருதுவது பல உயிர்களை வீணாக இழப்பதற்குச் சமனாகும்.

BRITISH ISLAMIC MEDICAL ASSOCIATION

[E] covid@britishima.org [i] The final decision is always the responsibility of the individual [Ref] bit.ly/3pCXSyw

# **வதந்தி:** GP மருத்துவர்கள் கோவிட் தடுப்பூசி மூலம் பணம் சம்பாதிக்கிறார்கள்



**உண்மை:** இங்கிலாந்தில் வைத்தியர்களுக்கு ஒவ்வொரு தடுப்பூசி ஏற்றுவதற்காகவும் £12.5 வீதம் வழங்கப்படுகிறது.

- காலை 8 மணி முதல் இரவு 8 மணி வரை வேலை செய்தல்
- மண்டபம் மற்றும் உபகரண செலவுகள்
- தாதிகளுக்கான கொடுப்பனவு
- தடுப்பூசிக்குப் பிறகு நோயாளிகளைக் கண்காணிப்பதற்கான செலவு

என பல்வேறு செலவுகளும் இதில் அடங்கும். சில வைத்தியர்களுக்கு இது நட்டத்தை ஏற்படுத்தலாம்.

BRITISH ISLAMIC MEDICAL ASSOCIATION

[E] covid@britishima.org [i] The final decision is always the responsibility of the individual [Ref] bit.ly/3o2ZLUE

# **வதந்தி:** கோவிட் தடுப்பூசி நிரந்தர பக்க விளைவுகளை ஏற்படுத்துகிறது

**உண்மை:** இதுவரை எவரும் நிரந்தர பக்க விளைவுகளால் பாதிக்கப்படவில்லை.

CDC இணையத்தளத்தின் தகவல்களை தவறாக விளங்கியதால் இவ்வதந்தி பரவியது. உண்மையில் தடுப்பூசி போட்டவர்களில் 3000 பேர் **தற்காலிக** பக்க விளைவுகளால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

எந்த மருந்தினாலும் பக்க விளைவு ஏற்படலாம். ஆனால் நோயின் பாதிப்புடன் ஒப்பிடும் போது இது புறக்கணிக்கத்தக்கது.

BRITISH ISLAMIC MEDICAL ASSOCIATION

**வதந்தி:** 5G தொலைபேசி இணைப்பினால் கோவிட் ஏற்படுகிறது



**உண்மை:** 5G இல்லாத நாடுகளிலும் கோவிட் பரவுகிறது. இது எவ்வித அடிப்படையுமற்றது.

வூஹானில் 5G நிறுவப்பட்ட அதே காலத்தில் கோவிட் பரவிய போதிலும் சீனாவின்  ஏனைய பாகங்களில்  அதற்கு முன்னர் 5G நிறுவப்பட்ட போது கோவிட் பரவவில்லை. அத்துடன் 5G இல்லாத நாடுகளையும் கோவிட் பாதித்துள்ளது.

BRITISH ISLAMIC MEDICAL ASSOCIATION

[E] covid@britishima.org [i] The final decision is always the responsibility of the individual [Ref] bbc.in/3omwJzx

# **வதந்தி:** கோவிட் இறப்புகள் மிகைப்படுத்தப்படுகின்றன



**உண்மை:** பதிவு செய்யப்பட கோவிட் மரணங்களை விட உண்மையான எண்ணிக்கை அதிகமாகக் காணப்படும்.

கோவிட் இறப்புக்களில் அதிகமானவை PCR பரிசோதனை மூலம் உறுதி செய்யப்பட்டிருக்கும். எனினும் சிலரில் PCR நெகடிவ் ஆக இருந்தாலும் CT ஸ்கேன் போன்ற பரிசோதனைகள் மூலம் தொற்று உறுதி செய்யப்பட்டிருக்கும்.

BRITISH ISLAMIC MEDICAL ASSOCIATION

# **வதந்தி:** தடுப்பூசி போடுமாறு மருத்துவர்கள் வற்புறுத்துகிறார்கள்

**உண்மை:** உண்மைத் தகவல்களின் அடிப்படையில் மக்கள் சரியான தேர்வை மேற்கொள்ள வேண்டும் என்றே நாங்கள் விரும்புகிறோம்.

பெரும்பாலான நாடுகள் மக்களை வற்புறுத்துவதில்லை. அறிவூட்டவே முயற்சிக்கின்றன.

மக்கள் தவறாக வழிநடத்தப்படும் பொழுது அதனை சுட்டிக்காட்டுவது எங்களது பொறுப்பாகும்.

BRITISH ISLAMIC MEDICAL ASSOCIATION

[E] covid@britishima.org [i] The final decision is always the responsibility of the individual [Ref] bit.ly/3nfQ6sQ

# **வதந்தி:** கோவிட் தடுப்பூசியில் ஹராமான மூலப்பொருட்கள் அடங்கியுள்ளன

**உண்மை:** Pfizer-BioNTech தடுப்பூசியில் விலங்குகளின் மூலப் பொருட்கள் எதுவும் இல்லை.

பல ஆண்டுகள் கற்றுத் தேர்ந்த இஸ்லாமிய அறிஞர்களே ஹலால், ஹராம் என்பவற்றை தெளிவுபடுத்தும் அறிவுடையவர்கள்.

Pfizer-BioNTech தடுப்பூசி உற்பட பெரும்பாலான தடுப்பூசிகள் ஹலாலானவை என இஸ்லாமிய அறிஞர்கள் தீர்ப்பு வழங்கியுள்ளனர்.

BRITISH ISLAMIC MEDICAL ASSOCIATION

# **வதந்தி:** தடுப்பூசிகளில் கலைக்கப்பட்ட கருக்களின் பகுதிகள் காணப்படுகின்றன

**உண்மை:** தடுப்பூசிகளில் எந்த மனித கலங்களோ இறந்த குழந்தைகளின் பாகங்களோ காணப்படுவதில்லை.

பல ஆண்டுகளுக்கு முன்னர் சில தடுப்பூசிகள் உற்பத்தி செய்யும் ஊடகமாக கருக் கலங்கள் பயன்படுத்தப்பட்டன. அவை தடுப்பூசிகளுக்குள் செல்வதில்லை. அந்த நேரத்தில் இதற்கான மாற்று வழி காணப்படவில்லை. இவை தற்போதைய தடுப்பூசிகளில் காணப்படுவதில்லை. அத்துடன் Pfizer தடுப்பூசிக்கும் இம்முறைக்கும் எந்த சம்பந்தமும் இல்லை.

BRITISH ISLAMIC MEDICAL ASSOCIATION

# **வதந்தி:** தடுப்பூசிகளில் மக்களைக் கண்காணிக்கும் chip அடங்கியுள்ளன.



**உண்மை:** தடுப்பூசிகளில் கண்காணிப்புச் சாதனம் எதுவும் இல்லை.

ஒன்றுடனொன்று போட்டியிடும் உலக நாடுகள் கூட மற்ற நாட்டில் தயாரிக்கப்பட்ட தடுப்பூசிகளை அனுமதித்துள்ளது.

மக்களைக் கண்காணிக்க இதைவிட இலகுவான வழிகள் உள்ளன. (உ.ம். கையடக்கத் தொலைபேசி / வங்கி அட்டைகள்)

BRITISH ISLAMIC MEDICAL ASSOCIATION

[E] covid@britishima.org [i] The final decision is always the responsibility of the individual [Ref] bbc.in/3omwJzx

# **வதந்தி:** தடுப்பூசிகள் பாதுகாப்பற்றவை - இதனால்தான் கர்ப்பிணிப் பெண்களில் பரிசோதிக்கப்படவில்லை



**உண்மை:** கர்ப்பிணிப் பெண்கள் மற்றும் குழந்தைகள் பொதுவாக எந்த ஆரம்ப சோதனைகளிலும் சேர்க்கப்படுவதில்லை.

தற்போதைய நிலையில் குழந்தைகளுக்கு கோவிட் தடுப்பூசி பரிந்துரைக்கப்படவில்லை. இது பாதுகாப்பற்றது என்று அர்த்தமல்ல. மாறாக தற்போதுள்ள தகவல்களின்படி நன்மை தீமை விகிதாசாரத்தை அடிப்படையாக வைத்து பெறப்பட்ட முடிவு. உண்மையில் இது ஒரு பாதுகாப்பு நெறிமுறையாகும்.

BRITISH ISLAMIC
MEDICAL ASSOCIATION

[E] covid@britishima.org [i] The final decision is always the responsibility of the individual [Ref] bit.ly/3okdxlU

# **வதந்தி:** மருந்து நிறுவனங்கள் அனைத்தும் தீயவை, எனவே அவற்றை நம்ப முடியாது

**உண்மை:** மருந்துக் கம்பனிகள் சில சமயங்களில் இலாப நோக்குடன் செயற்பட்டுள்ளன. அதற்காக அவர்களின் மருந்துகள் அனைத்தையும் நாம் நிராகரிக்க வேண்டும் என்று அர்த்தமில்லை.

ஒரு தொழில்நுட்பத்தை ஏற்றுக்கொள்வது என்பது சம்பந்தப்பட்ட  நிறுவனத்தின் தார்மீக பொறுப்பை அடிப்படையாக வைத்து தீர்மானிக்கப்படுவதில்லை. மாறாக அவற்றின் நன்மையை வைத்தே தீர்மானிக்கப்படும்.

BRITISH ISLAMIC MEDICAL ASSOCIATION

[E] covid@britishima.org [i] The final decision is always the responsibility of the individual [Ref] bit.ly/2XdNG3b

# **வதந்தி:** மிக விரைவாக அங்கீகரிக்கப்பட்டதனால் கோவிட் தடுப்பூசி பாதுகாப்பாக இருக்காது



**உண்மை:** துரிதமாக ஒப்புதல் பெறப்பட்ட போதிலும் இங்கு குறுக்கு வழிகள் எதுவும் பயன்படுத்தப்படவில்லை.

கோவிட் தடுப்பூசியை உருவாக்க உலகளாவிய ரீதியில் ஒத்துழைப்பு மற்றும் நிதி ஒதுக்கீடு வழங்கப்பட்டது. இதனால் பல விஞ்ஞானிகள் துரித வேகத்தில் வேலை செய்ய முடிந்தது.

BRITISH ISLAMIC MEDICAL ASSOCIATION

# **வதந்தி:** தடுப்பூசி உங்கள் மரபணுவை மாற்றக்கூடும்



**உண்மை:** RNA மூலம் எந்த நபரின் மரபணுவையும் மாற்ற முடியாது.

சில வகை கோவிட் தடுப்பூசிகள் mRNA தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி தயாரிக்கப்படுகின்றன. இது உடலினுள் செலுத்தப்பட்டதும் ஒரு புரதத்தை உருவாக்கி நோயெதிர்ப்பு சக்தியைத் தூண்டும். mRNA ஒருபோதும் மரபணு சேமிக்கப்பட்டுள்ள கலத்தின் கருவுக்குள் நுழைவதில்லை.

BRITISH ISLAMIC MEDICAL ASSOCIATION

[E] covid@britishima.org [i] The final decision is always the responsibility of the individual [Ref] bit.ly/3ptQhlM

**வதந்தி:** PCR பரிசோதனையை கண்டுபிடித்தவர், கோவிட் போன்ற நோய்களைக் கண்டறிய இது செய்யப்படவில்லை என்கிறார்

**உண்மை:** PCR செயல்முறையின் கண்டுபிடிப்பாளரான டாக்டர் கேரி முல்லிஸ் இவ்வாறு சொன்னதற்கான எந்த ஆதாரமும் இல்லை.

கோவிட் தொற்று கண்டறியப்படுவதற்கு சில மாதங்களுக்கு முன்னர் (2019 ஆகஸ்ட் மாதத்தில்) டாக்டர் முல்லிஸ் இறந்துவிட்டார்.

BRITISH ISLAMIC MEDICAL ASSOCIATION

[E] covid@britishima.org [i] The final decision is always the responsibility of the individual [Ref] bit.ly/38T50zX

**வதந்தி:** PCR பரிசோதனை தவறானது - அத்துடன் நோய்த்தொற்றுகளை அதிகமாக மதிப்பிடுகிறது

**உண்மை:** எந்தவொரு சோதனையும் 100% துல்லியமானது அல்ல.

கோவிட் அறிகுறிகளுடன் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டவர்களின் எண்ணிக்கை மற்றும் இறப்புகளின் எண்ணிக்கை உள்ளிட்ட தகவல்கள் இதன் தீவிரத்தை நமக்கு உணர்த்துகிறது.

BRITISH ISLAMIC MEDICAL ASSOCIATION

**வதந்தி:** 99.97% ஆன கோவிட் நோயாளிகள் குணமடைகின்றனர், 3% ஆனவர்களுக்கு தடுப்பூசியினால் பாரிய பக்க விளைவுகள் ஏற்படுகின்றன.



**உண்மை:** இந்த தகவல் தவறானது. இதுவரை இரண்டு மில்லியனுக்கும் அதிகமான மக்கள் கோவிடால் இறந்துள்ளனர்.

தடுப்பூசியின் மூலம் ஏற்படக்கூடிய சிறிய, குறுகிய கால பக்க விளைவுகள் நோயினால் இறப்பதைக் விடவும் பல மடங்கு சிறியது.

BRITISH ISLAMIC MEDICAL ASSOCIATION

# **வதந்தி:** முகக்கவசம் அணிவது உங்கள் ஆரோக்கியத்திற்கு பாதிப்பானது



**உண்மை:** முகக்கவசம் அணிவது தீங்கு விளைவிக்கும் என்பதற்கு எந்த ஆதாரமும் இல்லை, ஆனால் அது மற்றவர்களைப் பாதுகாக்க உதவும் என்பதற்கான சான்றுகள் உள்ளன.

கோவிட் பரவுவதைத் தவிர்க்க சமூக இடைவெளி, முகக்கவசம் அணிதல், கை கழுவுதல் போன்றவற்றை நாம் தொடர்ந்து கடைப்பிடிக்க வேண்டும்.

BRITISH ISLAMIC MEDICAL ASSOCIATION

[E] covid@britishima.org [i] The final decision is always the responsibility of the individual [Ref] bit.ly/34YX6Uv

# **வதந்தி:** மந்தை நோய் எதிர்ப்பு சக்திக்காக நாம் காத்திருக்க வேண்டும்



**உண்மை:** மந்தை நோய் எதிர்ப்பு சக்தியை (herd immunity) அடைவதற்கு முன்னர் நிகழும் இறப்புகளின் எண்ணிக்கை அபாயகரமானது.

மந்தை நோய் எதிர்ப்பு சக்தியை அடைவதற்கு கிட்டத்தட்ட அனைவரும் இந்நோயினால் பீடிக்கப்பட்ட வேண்டும். இந்நிலையில் மிக அதிகமானவர்கள் இதனால் இறந்திருப்பர்.

BRITISH ISLAMIC MEDICAL ASSOCIATION

[E] covid@britishima.org [i] The final decision is always the responsibility of the individual [Ref] bit.ly/3s0Hfim

**வதந்தி:** மருத்துவமனைகள் மிகவும் பிஸியாக இருந்தால் நைட்டிங்கேல் மருத்துவமனைகள் ஏன் காலியாக உள்ளன?

**உண்மை:** இங்கிலாந்தில் உள்ள நைட்டிங்கேல் மருத்துவமனைகள் அதி தீவிர சிகிச்சைப் பிரிவாக அமைக்கப்பட்டன, வேறு பல வசதிகள் அவற்றில் இல்லை. தற்போது அவற்றை இயக்க ஊழியர் பற்றாக்குறை உள்ளது.

[E] covid@britishima.org [i] The final decision is always the responsibility of the individual [Ref] bit.ly/3rYQMq4

BRITISH ISLAMIC MEDICAL ASSOCIATION

# **வதந்தி:** கோவிட் தடுப்பூசியை ஏற்றிய தாதி ஒருவர் கேமராவில் இறந்தார்



**உண்மை:** தாதியார் மயக்கம் அடைந்தார். பின்னர் பத்திரிகையாளர் சந்திப்பில் தான் சாதாரணமாக வலி ஏற்படும் போது மயக்கமடையக்கூடியவள் எனக் கூறியிருந்தார்.

பல்லாயிரக்கணக்கானவர்களில் தடுப்பூசி பரிசோதிக்கப்பட்ட பின்னரே அது அங்கீகரிக்கப்பட்டுள்ளது. தடுப்பூசி பெறும் நோயாளிகளிடமிருந்து மேலதிக தகவல்கள் இப்போது சேகரிக்கப்படுகின்றது.

BRITISH ISLAMIC MEDICAL ASSOCIATION

[E] covid@britishima.org [i] The final decision is always the responsibility of the individual [Ref] reut.rs/3o6ls6k

# **வதந்தி:** புதிய வகை கோவிட் வைரஸ் காரணமாக தடுப்பூசி போடுவதால் எந்த பயனும் இல்லை

**உண்மை:** தடுப்பூசிகள் புதிய வகை வைரஸிலிருந்து பாதுகாக்காது என்பதற்கு தற்போது எந்த ஆதாரமும் இல்லை.

இவ்வாறான வைரஸ்களில் மரபணு மாற்றங்கள் நடைபெறுவது சாதாரண விடயம்.

விஞ்ஞானிகள் புதிய விகாரங்கள் தொடர்பாக ஆராய்ந்து வருகின்றனர். சிறிய விகாரங்கள் பெரும்பாலும் தடுப்பூசியின் செயல்திறனை பாதிக்காது.

BRITISH ISLAMIC MEDICAL ASSOCIATION

# **வதந்தி:** தடுப்பூசிகளில் அல்கஹோல் உள்ளது, எனவே அதை அனுமதிக்க முடியாது

**உண்மை:** ஒக்ஸ்போர்ட் (Oxford) தடுப்பூசியில் இயற்கையான உணவுகள் அல்லது பாண் போன்றவற்றில் காணப்படுவதை விட குறைவான அளவு எத்தனோல் உள்ளது.

இஸ்லாமிய அறிஞர்கள் ஒக்ஸ்போர்ட் தடுப்பூசியை அனுமதித்துள்ளனர். எந்தவொரு தயாரிப்பிற்கும் மார்க்க அனுமதி என்பது அறிஞர்களினால் தீர்மானிக்கப்பட வேண்டும்.

[E] covid@britishima.org [i] The final decision is always the responsibility of the individual [Ref] https://bit.ly/3oVLnhr

BRITISH ISLAMIC MEDICAL ASSOCIATION

## **வதந்தி:** கோவிட் தடுப்பூசி மனிதர்களுக்கு தீங்கு விளைவிக்கும் மரபணு மாற்றப்பட்ட உயிரிணங்களைக் கொண்டுள்ளது



**உண்மை:** AstraZeneca கோவிட் தடுப்பூசியில் உள்ள அடினோ(Adeno) வைரஸ் பாதுகாப்பானது. இது நம் உடலில் நோயை ஏற்படுத்தாது.

AstraZeneca தடுப்பூ சியில் காணப்படும் வைரஸானது கோவிடுக்கு எதிராக நோயெதிர்ப்புச் சக்தியை தூண்டும் விதத்தில் மரபணு மாற்றப்பட்டுள்ளது.

BRITISH ISLAMIC MEDICAL ASSOCIATION

**வதந்தி:** தடுப்பூசிகளில் பன்றி இறைச்சி அல்லது பிற விலங்குகளின் பகுதிகள் உள்ளன



**உண்மை:** தற்போது பாவனையிலுள்ள தடுப்பூசிகளில் பன்றி இறைச்சி அல்லது பிற விலங்கு பொருட்கள் எதுவும் இல்லை.

ஒரு தடுப்பூசியில் தடுக்கப்பட்ட பொருட்கள் இருந்தாலும் மாற்று வழிகள் இல்லாதவிடத்து அவற்றைப் பயன்படுத்தலாம் என பிரதான மார்க்க அறிஞர்கள் தெரிவித்துள்ளனர்.

BRITISH ISLAMIC MEDICAL ASSOCIATION

# **வதந்தி:** கோவிட் தடுப்பூசி மூலம் கோவிட் தொற்று ஏற்பட முடியும்



**உண்மை:** இல்லை. தடுப்பூசி மூலம் கோவிட் நோய் ஏற்படாது.

கோவிடை ஏற்படுத்தும் வைரஸை எவ்வாறு கண்டறிந்து அதற்கெதிராகப் போராட வேண்டும் என்பதை தடுப்பூசி நமது நோயெதிர்ப்புத் தொகுதிக்கு கற்பிக்கின்றன.

பொதுவாக இந்தச் செயல்முறை இலேசான பக்க விளைவுகளை ஏற்படுத்தும்.

[E] covid@britishima.org [i] The final decision is always the responsibility of the individual [Ref] https://bit.ly/38Q85BW

BRITISH ISLAMIC MEDICAL ASSOCIATION

# **வதந்தி:** கோவிட் தடுப்பூசி மலட்டுத்தன்மையை ஏற்படுத்தும்



**உண்மை:** கோவிட் தடுப்பூசிகள் மலட்டுத்தன்மையை ஏற்படுத்துகின்றன என்பதற்கு எந்த ஆதாரமும் இல்லை.

கோவிட் தடுப்பூசி ஆராய்ச்சியில் பங்குகொண்ட பல பெண்கள் பின்னர் கர்ப்பம் தரித்துள்ளனர்.

BRITISH ISLAMIC MEDICAL ASSOCIATION

[E] covid@britishima.org [i] The final decision is always the responsibility of the individual [Ref] https://wb.md/3sNnA5V

# **வதந்தி:** தடுப்பூசி போட்ட பிறகு கோவிட் நோய் ஏற்படுவது அவை வேலை செய்யாது என்பதற்கான சான்றாகும்



**உண்மை:** தடுப்பூசி ஏற்றிய பின்னர் நோயெதிர்ப்பு சக்தி விருத்தியடைய பல நாட்கள் அல்லது வாரங்கள் ஆகலாம்.

தடுப்பூசியானது கோவிட் மூலம் கடுமையான பாதிப்பு ஏற்படுவதைத் தடுக்கிறது.

எந்தவொரு தடுப்பூசியும் 100% வினைத்திறனாக இருக்காது. எனவே அனைவரும் பொதுச் சுகாதார முறைகளையும் பின்பற்ற வேண்டும்.

[E] covid@britishima.org [i] The final decision is always the responsibility of the individual [Ref] https://bit.ly/3p6kBDn

BRITISH ISLAMIC MEDICAL ASSOCIATION

**வதந்தி:** உங்களுக்கு ஏற்கனவே கோவிட் தொற்று ஏற்பட்டிருந்தால் தடுப்பூசி தேவையில்லை



**உண்மை:** கோவிட் ஏற்பட்டதன் பின்னர் எவ்வளவு காலம் நோயெதிர்ப்புச் சக்தி நிலைத்திருக்கும் என்பது எங்களுக்குத் தெரியாது, எனவே தடுப்பூசி ஏற்றிக் கொள்வது சிறந்தது.

தற்போதைய அறிவுறுத்தலின்படி கோவிட் ஏற்பட்டவர்கள் நோய் குணமடைந்து 4 வாரங்களுக்குப் பின்னரே தடுப்பூசி போட வேண்டும்.

[E] covid@britishima.org [i] The final decision is always the responsibility of the individual [Ref] https://bit.ly/3sBOWeT

BRITISH ISLAMIC MEDICAL ASSOCIATION

# **வதந்தி:** எந்த வகையான கோவிட் தடுப்பூசியை ஏற்றுவது என நீங்கள் தேர்வு செய்யலாம்

**உண்மை:** நடைமுறைச் சிக்கல்கள் காரணமாக தேர்வு செய்யும் வாய்ப்பு கிட்டாது. எனவே உங்களுக்கு வழங்கப்படும் தடுப்பூசியை பெற்றுக்கொள்வது சிறந்தது.

தற்போது பாவனையிலுள்ள அனைத்து தடுப்பூசிகளும் போதியளவு நோய் எதிர்ப்பு சக்தியை வழங்கக்கூடியவை. அவற்றின் தரம் மற்றும் செயல்திறன் ஆகியவற்றை ஆராய்ந்த பின்னரே அவை அனுமதிக்கப்பட்டுள்ள.

**வதந்தி:** நான் தடுப்பூசி எடுக்க மாட்டேன் என்று முடிவு செய்தால், அது மற்றவர்களை பாதிக்காது



**உண்மை:** உங்கள் முடிவுகள் உங்களை மாத்திரமல்லாது அனைவரையும் பாதிக்கும். குறிப்பாக மிகவும் பலவீனமானவர்கள் மற்றும் நோய்வாய்ப்பட்டவர்களைப் பாதிக்கும்.

தடுப்பூசி ஏற்றாவிட்டால் கோவிட் மூலம் நீங்கள் கடுமையாக பாதிக்கப்படலாம். இதனால் உங்களைப் பராமரிக்க வேண்டியவர்களுக்கும் இது பாதிப்பை ஏற்படுத்தும்.

BRITISH ISLAMIC MEDICAL ASSOCIATION

**வதந்தி:** நான் இளமையாகவும் ஆரோக்கியமாகவும் இருக்கிறேன். எனவே எனக்கு கோவிட் தடுப்பூசி தேவையில்லை



**உண்மை:** கடந்த சில வாரங்களில் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டவர்களில் 40% ஆனவர்கள் 18 முதல் 64 வயதுக்குட்பட்டவர்கள்.

வயதானவர்களுக்கு கோவிட் ஏற்படும் ஆபத்து அதிகமாக இருந்தாலும், இது எந்த வயதினரையும் பாதிக்கலாம். அத்துடன் மரணத்தையும் ஏற்படுத்தலாம்.

BRITISH ISLAMIC MEDICAL ASSOCIATION

[E] covid@britishima.org [i] The final decision is always the responsibility of the individual [Ref] https://bbc.in/3qs9swL

**வதந்தி:** வயதானவர்கள் மற்றும் நோய்வாய்ப்பட்டவர்கள் மட்டுமே கோவிட் மூலம் இறக்கின்றனர்



**உண்மை:** இது பொய்யானது மற்றும் நெறிமுறையற்ற கருத்தாகும்.

அதி தீவிர சிகிச்சை பிரிவுகளில் அனுமதிக்கப்படும் கோவிட் நோயாளிகளின் சராசரி வயது 60 ஆகும்.

எல்லா உயிர்களும் விலைமதிப்பற்றவை.

BRITISH ISLAMIC MEDICAL ASSOCIATION

# **வதந்தி:** தடுப்பூசிகளில் பிரச்சினைகள் இருந்தால் அதற்கு யாரும் பொறுப்புக் கூறமாட்டார்கள்



**உண்மை:** மருந்து உற்பத்தியாளர்களுக்கு அனைத்துப் பொறுப்புகளிலிருந்தும் விலக்கு அளிக்கப்படவில்லை.

உற்பத்தியை ஊக்குவிப்பதற்காக மருந்து நிறுவனங்களுக்கு அரசாங்கத்தினால் சில சலுகைகள் வழங்கப்பட்டுள்ளன. இருப்பினும் அவர்கள் மீது பல  கடமைகள் சுமத்தப்பட்டுள்ளன. இது ஒரு புதிய விடயம் அல்ல.

# **வதந்தி:** கோவிட் தடுப்பூசியை எதிர்க்கும் சுகாதார நிபுணர்களும் உள்ளனர்

**உண்மை:** பெரும்பான்மையான பொது சுகாதார நிபுணர்கள் மற்றும் விஞ்ஞானிகள் கோவிட் தடுப்பூசிகளை ஊக்குவிக்கின்றனர்.

உலகெங்கிலும் உள்ள விஞ்ஞானிகள் பாதுகாப்பான கோவிட் தடுப்பூசிகளை உருவாக்கி ஆயிரக்கணக்கான உயிர்களை காப்பாற்ற முனைகின்றனர்.
எல்லாத் துறையிலும், பொதுவான கருத்துடன் உடன்படாத ஒரு சிறுபான்மையினர் இருப்பார்கள். அவர்களது வாதங்கள் ஆதாரங்களை அடிப்படையாகக் கொண்டவையல்ல.

[E] covid@britishima.org [i] The final decision is always the responsibility of the individual [Ref] https://bit.ly/2XLkXTE

BRITISH ISLAMIC MEDICAL ASSOCIATION

# **வதந்தி:** தடுப்பூசிகள் 100% பாதுகாப்பாக இருக்க வேண்டும்

**உண்மை:** தடுப்பூசிகள்  நோய்களைத் தடுக்கக்கூடிய ஒரு பாதுகாப்பான வழியாகும். ஆனால் எந்த மருந்தும் 100% பாதுகாப்பானதல்ல.

தடுப்பூசிகள் பல மருந்துகளை விட உயர்ந்த தரத்தில் தயாரிக்கப்பட்டுள்ளன.

BRITISH ISLAMIC MEDICAL ASSOCIATION

[E] covid@britishima.org [i] The final decision is always the responsibility of the individual [Ref] https://bit.ly/2KKMnpM

# **வதந்தி:** கோவிட் தடுப்பூசியால் மக்கள் இறந்து கொண்டிருக்கிறார்கள்

**உண்மை:** கோவிட் தடுப்பூசி போட்ட பின்னர் சிலர் இறந்துவிடுவார்கள். இந்த மரணத்திற்கு காரணம் தடுப்பூசி என்று அர்த்தமல்ல.

10 மில்லியன் மக்களுக்கு தடுப்பூசி போடப்பட்டு, அவர்களுக்கு எந்தவிதமான பக்க விளைவுகளும் ஏற்படாவிட்டாலும் அதில் சுமார் 14,000 பேர் வேறு பல காரணங்களால் இறந்துவிடுவார்கள். இது இயற்கையாக நிகழ்வதாகும்.

BRITISH ISLAMIC MEDICAL ASSOCIATION

[E] covid@britishima.org [i] The final decision is always the responsibility of the individual [Ref] https://bit.ly/2KKMnpM